| | |
|---|---|
| TNVR13000570<br>2025 | சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை<br>முன்னிலை–திரு.ஆர்.சதீஷ், எம்.எல்.,<br>சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை<br>2026 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11 ம் நாள் செவ்வாய்க்கிழமை<br>**அ.வ.எண்.247/2025** |

போஸ் ... வாதி

/எதிர்/

கனகவேல் ... பிரதிவாதி

இவ்வழக்கு 11.08.2026 ம் தேதி அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. சி. தங்கப்பாண்டியன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி வழக்கறிஞர் திரு.டி. முருகன் அவர்கள்மூலம் ஆஜராகியிருந்தாலும், பிரதிவாதிதரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாத நிலையில், பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ள நிலையிலும், மேலும், வாதி தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

<u>தீர்ப்புரை</u>

வாதிக்கு பிரதிவாதி செலுத்தவேண்டிய தொகை ரூ.1,71,800/–ம் மேற்படி தொகையில் அசல் தொகை ரூ.1,00,000/–க்கு பிராது தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதிவரை 6% பின்வட்டி சேர்த்து செலுத்தக்கோரியும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2.வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:–</u>**

வாதியும், பிரதிவாதியும் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நல்ல பழக்கம் உள்ளவர்கள். பிரதிவாதி குடும்ப செலவுகளுக்காகவும், சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும், பிரதிவாதி வாதியிடம் அணுகி கடன் கேட்டதில் கடந்த

27.07.2022ம் தேதி ரூ.1,00,000/- கடனாக சாட்சிகள் முன்னிலையில் வாதி வீட்டில் வைத்து பெற்றுக் கொண்டு மேற்படி தொகைக்கு ரூ.100/-க்கு ரூ.2/- வீதம் வட்டி செலுத்த ஒப்புக்கொண்டு அதற்கு ஆதரவாக ரூ.20/- கடன் பத்திரத்தில் சாட்சிகள் முன்னிலையில் எழுதி அதில் பிரதிவாதியும், சேதுராயனேந்தல் காந்தி என்பவரும் மற்றும் மாரிமுத்து என்பவரும் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார்கள். பிரதிவாதி கடன் பெறும்போது வாதியிடம் 6 மாத காலத்தில் வட்டியும் அசலும் சேர்த்து செலுத்தி விடுவதாக உறுதி கூறினார். ஆனால் 6 மாத காலம் முடிந்து அசலையும் வட்டியையும் திருப்பி செலுத்துமாறு வாதி பிரதிவாதியை அணுகி கேட்டபோது தருவதாக சொல்லி ஏமாற்றி வந்தள்ளார். ஆனால் ஒப்புக்கொண்டபடி வட்டியோ அசலோ திருப்பி தரவே இல்லை. அதனால் வாதி கடந்த 24.07.2025ம் தேதி அவரது வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிக்கு மேற்படி கடன் பத்திர தொகையை வட்டியுடன் செலுத்தி மேற்படி கடன் பத்திரத்தை ரத்து செய்து கொள்ளும்படி அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி கடன் தொகை வட்டியுடன் ரூ.1,71,800/-ஐ பிரதிவாதி மேற்படி திருப்பி தராத நிலையில் மேற்படி தொகையையும் அசல் தொகையை வட்டியுடன் பெற வேண்டியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

**3.இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவெனில்,**

வாதி கோரியுள்ள தொகை மற்றும் அதற்குரிய வட்டி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா என்பதேயாகும்.

**4.** இவ்வழக்கில் வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில், இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, வாதிதரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி வழக்கறிஞர்மூலம் ஆஜராகியிருந்தபோதிலும், பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாத நிலையில், பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில்,

பிரதிவாதி தரப்பில் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் எதுவும் முன்னிறுத்தப்படவில்லை.

**5.** வாதி தரப்பில், வாதியும் பிரதிவாதியும் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நன்கு பழக்கம் உள்ளவர்கள் எனவும், பிரதிவாதி குடும்ப செலவுக்காகவும், சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும் வாதியை அணுகி 27.07.2022 அன்று ரூ.1,00,000/– கடனாக பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு ரூ.100/–க்கு ரூ.2/–வீதம் வட்டி செலுத்த ஒப்புக்கொண்டு 6 மாத காலத்தில் அசல் மற்றும் வட்டித்தொகையை திருப்பி செலுத்திவிடுவதாக ஒப்புக்கொண்டு சாட்சிகள் முன்னிலையில் ரூ.20 க்கான கடன் பத்திரம் ஒன்றை எழுதிக்கொடுத்துள்ளதாகவும், ஆனால் 6 மாத காலம் முடிந்தும் அசலையும் வட்டியையும் பிரதிவாதி வாதியிடம் திருப்பி தராமல் காலம் தாழ்த்தி வந்ததாகவும், அதனால் மேற்படி கடன் பத்திர தொகையை கேட்டு வாதி பிரதிவாதிக்கு 24.07.2025 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும், பிரதிவாதி மேற்படி ரூ.20 க்கான கடன் பத்திர தொகையை திருப்பி தரவில்லை எனவும், எனவே வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தக் கோரி வாதி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

**6.** மேலும், வாதி தரப்பில் அவரது வழக்கை நிரூபிக்கும் வகையில் தன்னை வா.சா.1 ஆக விசாரித்துக் கொண்டு, வாதிதரப்பு வழக்கு குறித்து சாட்சியம் அளித்து வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்யும்பொழுது, வாதியிடம் பிரதிவாதி பெற்றுக்கொண்ட கடன் தொகை ரூ.1,00,000/–க்கு ஆதரவாக பிரதிவாதி ரூ.20/–க்கான கடன் பத்திரத்தை சாட்சிகள் முன்னிலையில் ஏற்படுத்தி வாதியிடம் கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

**7.** வா.சா.ஆ.1 ல் கண்ட தொகையை பிரதிவாதி வாதியிடம் திருப்பி

செலுத்தாத நிலையில், வாதியிடம் பிரதிவாதி பெற்றுக்கொண்ட கடன் தொகை ரூ.1,00,000/− வட்டியுடன் திரும்ப வாதியிடம் செலுத்த வேண்டி வாதி பிரதிவாதிக்கு வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ள என்பதனை அறியமுடிகிறது.

**8.** மேலும் வாதி அனுப்பிய அறிவிப்பில் 15 தினங்களுக்குள் வாதியிடம் பிரதிவாதி பெற்றுக்கொண்ட கடன் தொகையை வாதியின் வசம் செலுத்த வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் வாதி தரப்பில் பிரதிவாதி மீது சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அனுப்பி வைத்துள்ளார் என்பதும் மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்யும்பொழுது தெரிய வருகிறது.

**9.** ஆகையால், வாதி தரப்பில் முன்னிறுத்தப்பட்ட வா.சா.1 ன் வாய்மொழி சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவண சாட்சியங்கள் மூலமும் பிரதிவாதி வாதியிடம் பெற்ற கடன் தொகைக்கு நாளது தேதி வரை எவ்வித தொகையும் செலுத்தவில்லை என்பதை அறிய முடிகிறது. வாதி அவரது தரப்பில் முதன்மை வழக்கு உள்ளது என்பதை போதிய வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியத்தின் அடிப்படையில் வழக்குரையை ஒத்து நிரூபணம் செய்துள்ளார். பிரதிவாதி மேற்படி வாதியின் வழக்கை மறுத்துரைக்கும் வகையில் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தோன்றாத் தரப்பினராகியுள்ளார். எனவே, வாதிக்குரிய கடன் பத்திர தொகை வட்டியுடன் வாதிக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**10.** முடிவாக, வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டிய தொகை ரூ.1,71,800/−ம், அதில் அசல் தொகை ரூ.1,00,000/−க்கு பிராது தேதி முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதிவரை ஆண்டுக்கு 6% வட்டியும் வழங்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 11ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

SATHISH
Digitally signed by SATHISH
Date: 2026.08.11 16:16:44 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>வாதி தரப்பு சாட்சிகள் :</u>

வா.சா.1 போஸ் (வாதி)

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1. | 27.07.2022 | வாதிக்கு பிரதிவாதி ஏற்படுத்திக் கொடுத்த ரூ.20 கடன் பத்திரம் |
| வா.சா.ஆ.2. | 24.07.2024 | வழக்கறிஞர் அறிவிப்பு |
| வா.சா.ஆ.4. | --- | வாதியின் ஆதார் அட்டையின் நகல் |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

SATHISH
Digitally signed by SATHISH
Date: 2026.08.11 16:16:50 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
அசல் வழக்கு எண்.247/2025
சீரான/வரைவு தீர்ப்புரை
நாள் : 11.08.2026